# ஆண்டின் பொதுக்காலம் 27ஆம் வாரம்
# திருவழிப்பாட்டு ஆண்டு C (06-10-2013)

## திருப்பலி முன்னுரை:

ஆண்டின் பொதுக்காலம் 27ஆம் வாரத்திலிருக்கும் நாம், இன்றைய திருப்பலி வழிபாட்டில் பங்கேற்று இறைமொழிகள் நமக்குக் கூறுவதென்ன என்று அறிய முயலும் இறைமக்கள் அனைவருக்கும் என் இனிய வாழ்த்துகள். நம் நம்பிக்கையை மிகுதியாக்கும் ஆண்டவரின் சந்நிதானத்தில் விசுவாசத்தோடும், வேண்டுதல்களோடும் ஒன்று கூடியுள்ளோம்.

ஆண்டவரே, எத்துணைக் காலத்திற்கு நான் துணை வேண்டிக் கூக்குரலிடுவேன்: நீரும் செவிசாய்க்கா திருப்பீர்? இன்னும் எத்துணைக் காலத்திற்கு வன்முறையை முன்னிட்டு உம்மிடம் அழுது புலம்பவேன்: நீரும் எம்மை மீட்காமல் இருப்பீர்? என்னும் ஏக்கத்தோடும், நம்பிக்கையற்ற நிலையிலும் ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிடும் நமக்கு: இறைவனுடைய வாக்குறுதிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் படியும், அது நிறைவேறியே தீரும்: காலம் தாழ்த்தாது என்றும். இதை நம்பாதவரோ உள்ளத்திலே நேர்மையற்றவராய் இருப்பர்: நேர்மையுடையவரோ தம் நம்பிக்கையினால் வாழ்வடைவர் என்றும் தெளிவாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே நாம் அனைவரும் சோர்வடையாது, நிலைகுலையாது, நம்பிக்கையோடு இறைவனுடைய வாக்குறுதிகளை எதிர்பார்த்துக் காத்திருந்து, அவருடைய விருப்பப்படி வாழவும், திருத்தூதர்களைப் போன்று ஆண்டவரிடம் எங்களது நம்பிக்கையை மிகுதியாக்கும் என்று செபிப்போம். அதிசயங்களைக் காண்போம். வரம் கேட்டுச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

### பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**“நம்பிக்கை அளிப்பவராம் இறைவா,**

உம் திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் நற்கருணை பிரசன்னத்திலே, உம் வார்த்தையிலே இணைந்திருந்து உம் திருச்சபையை சிறப்புற வழிநடத்தி செல்ல வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும் தந்தையே!**

ஏக்கத்தோடும், நம்பிக்கையற்ற நிலையிலும் ஆண்டவராகிய உம்மை நோக்கிக் கூக்குரலிடும் அனைவருடைய வேண்டுதல்களுக்கும் இரங்கி, அவர்கள் அனைவரும் சோர்வடையாது, நிலைகுலையாது, நம்பிக்கையோடு உமது வாக்குறுதிகளை எதிர்பார்த்துக் காத்திருந்து, உமது விருப்பப்படி வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**திக்கற்ற பிள்ளைகளுக்குத் தந்தையாகவும் கணவனை இழந்தாளின் காப்பாளராகவும் இருக்கும் ஆண்டவரே**

கவலை, நோய், துன்பம் போன்றவற்றிலிருந்தும் விடுதலை பெறத் தவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் நீர் கொடுக்கின்ற ஆறுதலைப் பெற்றுக்கொள்ளவும், இயற்கை, செயற்கை அழிவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நீர் வாக்களித்த அனைத்தையும் எமக்கெனச் செய்து முடிக்கும் ஆண்டவரே!**

இப் மண்ணிலே புலம்பதித்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்களும், எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும், உமது அன்பிலிருந்து எங்களைப் பிரிக்க முற்படும் எல்லாவித தீய சக்திகளையும் இனங்கண்டு அவற்றை முறியடித்து, உமக்கேற்றவர்களாக வாழ எமக்கு வேண்டிய ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வல்லமையும் அன்பும் கட்டுபாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ள தந்தையே!**

நாம் உம்மிடமிருந்துகேட்ட நலந்தரும் வார்த்தைகளை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு, எமக்குள் குடிகொள்ளும் தூய ஆவியால் ஒப்படைக்கப்பட்ட நல்ல போதனையைக் காத்துக் கொள்ளவும் வேண்டிய நல்லுள்ளத்தை எமக்குத் தந்தருளவேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா,**

நீர் எங்களோடு என்றும் வாழ்கின்றீர் என்னும் நம்பிக்கையை எங்களில் வளர்த்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.